# மோசேக்கும் யோசுவாவுக்கும் தேவன் மகிழ்ச்சி தரும் உண்மைகளை வெளிப்படுத்தினார்.

**ஜெபம்:** "எல்லாம் வல்ல, நித்திய பிதாவே, உம்மை அறிந்து கொள்ளவும் உமது பரிசுத்தத்தையும் மகத்துவத்தையும் போற்றவும் சிறுவர்களுக்கு உதவுவீராக."

தேவைகளுக்கும், ஆயத்தம் செய்ய உங்களுக்கு இருக்கும் நேரத்திற்கும், சிறுவர்களின் முதிர்ச்சி நிலைக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்து கொள்க.



**யாத்திராகமம் 3:1-15ல்** இருந்து, ஒரு எரியும் புதரில் இருந்து தேவன் மோசேயிடம் பேசிய பகுதியை ஒரு பெரிய குழந்தையோ ஆசிரியரோ வாசிக்கட்டும். அதற்குப் பின், கீழ்வரும் கேள்விகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பிள்ளைக்கும் குறிப்பிட்டு ஆராதனை வேளையில் பெரியவர்களிடம் கேட்கும்படியாகக் கூறவும். கேள்வி கேட்குமுன் அதனுடைய பதிலை சிறுவர்கள் அறிந்திருக்க வேண்டும். *(பதில் ஒவ்வொரு கேள்விக்கும் பின்னால்)*

- முட்புதரைப் பற்றிய அதிசயம் என்ன? *(எரிந்தது ஆனால் வேகவில்லை)*
- புதரில் இருந்து மோசே கேட்டது என்ன? *(அவன் பெயர் கூப்பிடப்பட்டது)*
- மோசேயைப் பெயர் சொல்லி அழைத்தது யார்? *(ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன்)*
- மோசே ஏன் தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான்? *(அவன் நின்றது பரிசுத்த ஸ்தலம்)*
- என்ன செய்ய வேண்டும் என்று தேவன் மோசேயிடம் கூறினார்? *(அரசனாகிய பார்வோனிடம் சென்று தேவ ஜனங்களை எகிப்தில் இருந்து கொண்டு வரும்படி)*
- தமது பெயர் என்ன என்று தேவன் கூறினார்? *(இருக்கிறவராய் இருக்கிறேன்)*



**ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஆசிரியரோ யோசுவா 3:14-4:7** லிருந்து யோர்தான் நதியைக் கடப்பது பற்றி வாசிக்கட்டும் அல்லது கூறட்டும். தேவன் அவர்களுக்குச் செய்த பெரிய காரியங்களைப் பற்றி மக்கள் எவ்வாறு நினைவு கூர்ந்தனர் என்பது குறித்து இந்த வேதபகுதி கூறுகிறது.

கதையைக் கூறியபின் பின்வரும் கேள்விகளைக் கேட்கவும். *(ஒவ்வொரு கேள்விக்கும் பின்னும் பதில் வருகிறது).*

- யோர்தான் நதிக்குள் எந்த இஸ்ரவேலர்கள் முதலில் சென்றனர்? *(யோசுவா 3:14 ஐ வாசிக்கவும்)*
- உடன்படிக்கைப் பெட்டியை ஏந்திய ஆசாரியர்கள் நதியில் கால்வைத்ததும் என்ன நடந்தது? *(3:15)*
- நதியின் நடுவில் இருந்து பன்னிரண்டு தலைவர்களும் எதை எடுத்தனர்? *(4:3)*
- கற்களின் பயன் என்ன? *(4:6)*
- நதியில் இருந்து எடுத்த கற்களைத் தலைவர்கள் எங்கு போட்டனர்? *(4:8)*

யோர்தான் நதியைக் கடப்பது பற்றிய கதையின் பகுதிகளை **நாடகமாக்குக.** சபைத் தலைவரோடு பேசி சிறுவர்கள் இந்த சிறு நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும். ஆயத்தம் செய்வதில் பிள்ளைகள் சிறிய பிள்ளைகளுக்கு உதவி செய்யவும்.

- **பெரிய பிள்ளைகளோ** பெரியவர்களோ **யோசுவா** மற்றும் **கதை கூறுபவர்** ஆகிய வேடங்களை ஏற்கவும்.

- **இஸ்ரவேலர்கள், தலைவர்கள், ஆசாரியர்கள்** ஆகிய வேடங்களை **சிறியபிள்ளைகள்** ஏற்கட்டும். ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைக் குறிக்க ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ளவும்.

**கதை கூறுபவர்: யோசுவா 3:14-17**ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறவும். பின், சொல்ல வேண்டியது, "யோசுவா என்ன சொல்லுகிறான் என்று கேளுங்கள்."

**யோசுவா :** "நாம் யோர்தான் நதியைக் கடக்கப் போகிறோம். அது பெருக்கெடுத்து ஒடுகிறது. ஆனால் தேவன் நம்மைக் காய்ந்த நிலத்தின் வழியாக நடக்கச் செய்வார். அவர் செய்யப் போவதைப் பாருங்கள். ஆசாரியர்களே, உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு தண்ணீருக்குள் காலை வையுங்கள்."

**ஆசாரியர்கள்:** உடன்படிக்கைப் பெட்டியை சுமந்துகொண்டு நதிக்கு பாதிதூரம் வரையிலும் கடந்து போய் நிற்கிறார்கள். ஒருவன் கூறுகிறான். "பாருங்கள் ஆற்றுக்கு மேல் தண்ணீர் குவியலாக நிற்கிறது."

**இஸ்ரவேலர்கள்:** ஆற்றைக்கடந்து, ஆசாரியர்களையும் கடந்து போகின்றனர். ஒருவன் கூறுகிறான், "இதோ! நமது கால்கள் ஈரமாகவில்லை. நாம் உலர்ந்த நிலத்தின் வழியாக நடந்து வந்திருக்கிறோம்."

**கதை கூறுபவர்:** யோசுவா 4:1-7ல் இருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். பின் கூறவேண்டியது, "யோசுவா என்ன சொல்லுகிறான் என்று கேளுங்கள்."

**யோசுவா:** இஸ்ரவேலர்கள் நிற்கும் இடம் வரை கடந்து சென்று கூறுகிறான், "நாம் ஆற்றைக் கடந்து விட்டோம். ஒவ்வொரு வம்சத்தில் இருந்தும் ஒரு தலைவர் தலைக்கு ஒரு கல்லை நதியின் மத்தியில் இருந்து எடுக்கவும். இந்த நாளில் தேவன் நமக்கு செய்தவற்றை இவை நமது குழந்தைகளுக்கு ஞாபகப்படுத்தும்."

**தலைவர்கள்:** ஆசாரியர்கள் நின்றுகொண்டு இருக்கும் இடத்துக்குச் செல்கின்றனர். பாரமான கற்களை சுமந்து கொண்டு யோசுவா நிற்கும் இடத்துக்குக் கொண்டு வருவது போல பாவனை செய்யவும். ஒருவன் கூறுகிறான் "இவை மிகவும் கனமான கற்கள். நல்ல நினைவுச் சின்னமாக விளங்கும்."

**யோசுவா:** "இந்த கற்குவியலின் அர்த்தம் என்ன என்று நமது பிள்ளைகள் நம்மிடம் கேட்பர். இந்த நாளைப் பற்றி நாம் அவர்களுக்குச் சொல்லுவோம். தேவனின் மாபெரும் காரியங்களை நாம் நினைவு கூருவோம்."

**கதை கூறுபவர்:** உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறவும்.

இந்த நாடகத்தைப் பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், கேள்விகளையும் சேர்த்துக் கேட்கவும்.

சிறிய பிள்ளைகள் கற்குவியல் ஒன்றின் படத்தினை வரையவும். இந்தப் படத்தை அடுத்த ஆராதனை வேளையில் பெரியவர்களுக்குக் காட்டி, பாடல்கள் கதைகள் மூலமாக தேவன் நமக்கு செய்தவற்றை எவ்வாறு ஞாபகம் வைத்துக் கொள்வது என்பதை இது சித்தரிக்கிறது என்று விளக்கவும்.



கற்குவியிலை நினைவுச் சின்னமாக உபயோகித்தது போல கிறிஸ்தவர்களாகிய நாம் வேறு எந்த வழிகளில் தேவனுடைய செயல்களை ஞாபகம் வைத்துக் கொள்ளலாம் என்று **கேளுங்கள்.** மக்கள் உதாரணங்கள் குறித்து விவாதிக்கவும்.

**சங்கீதம்:** 145:4-7 ஐ நான்கு சிறுவர்கள் மற்றவர்களுக்காக ஒப்புவிக்கட்டும்.

மனப்பாடம்: **சிறுவர்கள்** பிலி. 4:4.

**பெரியபிள்ளைகள்** உபா. 8:3.

நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய தேவனுடைய பெரிய காரியங்களை பற்றி **பெரியபிள்ளைகள்** கவிதையோ பாடலோ எழுதட்டும்.

**ஜெபம்:** "அன்பான பிதாவே, நீர் எங்களுக்காகப் பல அற்புதமான காரியங்களைச் செய்தீர். அவற்றை ஞாபகத்தில் வைத்து உம்மை எப்போதும் துதிக்க எங்களுக்க உதவி செய்வீராக. பிற பிள்ளைகளுக்கு அதைப் பற்றி கூற உதவி செய்யும். உமது நன்மைகளை நினைவில் வைத்துக்கொள்ள, அவர்களுக்கு உதவும்படியான நடைமுறைக் கேற்ற வழிகளைக் கூறுவீராக."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net